# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date | : 25.04.2023 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : சங்ககிரி |
| Name | : மணியம்மாள் | Calling | : கால்மேட் தொழில் |
| Father/Husband Name | : பழனிசாமி | Religion | : இந்து |
| Village | : நாசிசெட்டிபட்டி | Age | : 54 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.04.2023.

(1முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1. நான் நாகிசெட்டிபட்டியில் குடியிருந்து கால் மேட் செய்யும் தொழில் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகள் எங்கள் தெருவிற்கு பக்கத்து தெருவில் குடியிருந்து வருகிறார்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஆங்கில புத்தாண்டுக்கு முதல்நாள் எங்கள் ஊரில்உள்ள மாரியம்மன் கோவிலில் ரேடியோ வைத்து விளையாட்டு போட்டி வைத்திருந்தனர். அன்று என்னுடைய கணவரின் அண்ணன் மகன் பிரியதர்ஷன் மாரியம்மன் கோவிலுக்கு சென்றபோது பக்கத்து தெருவை சேர்ந்த எதிரி கார்த்திக்குமார் பிரியதர்ஷனை பார்த்து கோவிலுக்கு வரக்கூடாது எனவும், கோவிலுக்கு வந்தால் அடித்துவிடுவேன் என்றும் கூறினார்.

2. பின்னர் பிரியதர்ஷ்ன் வீட்டிற்கு வந்து கூறினார். பின்னர் என்னுடைய கணவரும், பிரியதர்ஷனும் ஆர்.எஸ். ல் உள்ள ஒரு கடைக்கு சென்றனர். அந்த கடைக்கு கோவில் வழியாக செல்லும்போது பிரியதர்ஷனை பார்த்து கார்த்திக்குமார் உன்னை இப்போது அடிக்காமல் விடமாட்டேன் என்று கூறினார். என்னுடைய கணவர் கார்த்திக்குமாரை பார்த்து ஏன் பிரியதர்ஷனை அடிக்காமல்விடமாட்டேன் என்று கூறுகிறாய் என்று கேட்டுவிட்டு வீட்டிற்குவந்துவிட்டார். பின்னர் கார்த்திக்குமார் பிரவீன் மற்றும் கவின் ஆகியோருடன் பிரியதர்ஷ்னின் வீட்டிற்குவந்து பிரியதர்ஷனை கையால்

அடித்தனர். அடிக்கும் சத்தம்கேட்டவுடன் நான் மேட் தைக்கும் வேலையை விட்டு விட்டு ஓடி சென்று ஏன்டா அடிக்கிறீர்கள் என்று கேட்டுக்கொண்டு சண்டையை விளக்கினேன்.

3. மூன்று எதிரிகளும் என்னை கீழேதள்ளி, கன்னத்தில் அடித்து, ஜாக்கெட்டை கிழித்தனர். என்னை பார்த்து தேவிடியா ஏன் விபச்சாரிபோல் இங்கே வந்து நிக்கிற என்று திட்டினார்கள் . என்னை கீழேதள்ளி முதுகிலும், நெஞ்சிலும் அடித்தனர். முதுகிலும், நெஞ்சிலும் காலால் உதைத்தனர். கன்னத்திலும் அறைந்தனர். நான் இடதுகையால் தடுக்கும்போது பிளேடால் என் விரலில் கீறினார்கள். அதில் எனக்கு ரத்தம் வந்தது. அசிகங்மான வார்த்தைகளால் என்னை கேவலமாக திட்டினார்கள். என்னுடைய கணவரின் அண்ணன் தங்கராஜ் உடனே வந்தார். அவர் உடல் ஊனமுற்றவர் ஆவார்.

4. அவரை கீழேதள்ளி மூன்று விரல்களை திருகிவிட்டனர். என்னுடைய கணவரையும் கீழேதள்ளி கன்னத்தில் அறைந்தனர். அப்போது ராஜி என்பவர் அங்குவந்து கேஸ் எதுவும் கொடுக்க போககூடாது என்றும், கெட்ட வார்த்தையால் திட்டி பசங்கமேல் கேஸ்எதுவும் கொடுக்ககூடாது என்றும் கூறினார். பின்னர் சங்ககிரி, அரசுமருத்துவமனையில் 08.30 மணியளவில் சேர்ந்தேன். அங்கு சிகிச்சையில் இருந்தபோது சங்ககிரி போலிசார் என்னிடம் ஒரு புகார்வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**.) இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd /- Maniyammal

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date | : 25.04.2023 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : சங்ககிரி |
| Name | : பிரியதர்ஷன் | Calling | : +2 |
| Father/Husband Name | : தங்கராஜ் | Religion | : இந்து |
| Village | : நாகிசெட்டிபட்டி | Age | : 17 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.04.2023.
(1முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1. நான் நாசிசெட்டிபட்டியில் குடியிருந்து பனிரெண்டாம் வகுப்பு படித்துமுடித்துவிட்டேன். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். கடந்த 31.12.2020ம் தேதி மாலை 05.30 மணியளவில் எங்கள் ஊரில்உள்ள மாரியம்மன் கோவிலுக்கு சென்றேன். அப்போது அங்கே இருந்த கார்த்திக்குமார் நீ கோயிலுக்கு வரக்கூடாது என கூறினார். நான் பின்னர் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் சிறிது நேரம்கழித்து நானும், சித்தப்பா பழனிசாமியும் ஆர்.எஸ்.செல்வதற்காக கோயில்வழியாக சென்றபோது கார்த்திக்குமார் என்னை பார்த்து அடிக்காமல்விடமாட்டேன் என்று கூறினார்.

2. என் சித்தப்பா கார்த்திக்குமாரை பார்த்து எதற்காக பிரியதர்ஷ்னை அடிக்காமல்விடமாட்டேன் என்று கூறுகிறாய் என்று கேட்டார். பின்னர் நாங்கள் இருவரும் வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்னர் நான் என் வீட்டில் இருந்தபோது, கார்த்திக்குமார் என்னை அடித்தார். அவருடன் வந்த கவின் மற்றும் பிரவீன்குமாரும் என்னை கையால் அடித்தனர். என்னுடைய சத்தம்கேட்டு என்னுடைய சித்தி மணியம்மாள் அங்கே வந்தார். பின்னர் கார்த்திக்குமார், பிரவீன் குமார் மற்றும் கவின் ஆகியோர் என் சித்தியை பார்த்து தேவிடியா நீ எதற்கு இங்கே வந்தாய் என்று கூறி அடித்து ஜாக்கெட்டை கிழித்தனர். பின்னர் இடது கை ஆள்காட்டி விரலில்

பிளேடால் கிழித்தார்கள். வலதுகால் முட்டி, முதுகு , நெஞ்சு ஆகிய இடங்களில் என் சித்திக்கு அடிப்பட்டது. பின்னர் என்னுடைய அப்பா தங்கராஜ் அங்கே வந்தார். அவரையும் கீழேதள்ளி அடித்து இடது கையின் மூன்று விரல்களையும் பிடித்து திருகினர்.

3. பின்னர் இதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார்கொடுக்க செல்லலாம்என்று இருந்தபோது ராஜி என்பவர் வந்து இதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் கேஸ் எதுவும் கொடுக்க செல்லக்கூடாது எனவும், அதற்கு என்னுடைய சித்தப்பா நாங்கள் புகார்கொடுக்க செல்கிறோம் என்று கூறியதற்கு என் சித்தப்பாவை பார்த்து தேவிடியா மவனே என்று கெட்டவார்த்தையால் திட்டி அடிக்கவந்தார். பின்னர் என்னுடைய சித்தியை சங்ககிரி, அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd /- Priyadharshan

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.72/2022 | Date | : | 25.04.2023 |
| Deposition of Witness for | : | அ.சா.3 | Taluk | : | சங்ககிரி |
| Name | : | தங்கராஜ் | Calling | : | மெக்கானிக் |
| Father/Husband Name | : | அம்மாசை | Religion | : | இந்து |
| Village | : | நாகிசெட்டிபட்டி | Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.04.2023.

<u>(1முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1. நான் நாகிசெட்டிபட்டியில் குடியிருந்து திருச்செங்கோட்டிலுள்ள மெக்கானிக் ஒர்க் சாப்பில் கணக்குபிள்ளையாக வேலைசெய்துவருகிறேன். கடந்த 31.12.2020 ம் தேதி எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவிலில் புத்தாண்டு கொண்டாடுவதற்காக ஊரில் இருந்தவர்கள் மைக் செட் வைத்து தயார் செய்துகொண்டிருந்தனர். கோயிலுக்கு சென்ற என் மகன் பிரியதர்ஷனை பார்த்து எதிரி கார்த்திக்குமார் நீ கோயிலுக்கு வரக்கூடாது என்றும், கோயிலுக்கு வந்தால் உன்னை அடித்துவிடுவேன்என்று கூறியதால் வீட்டிற்குவந்துவிட்டதாக எங்களிடம் கூறினான்.

2. பின்னர் என்னுடைய தம்பி பழனிசாமியும், என்னுடைய மகனும் ஆர்.எஸ். செல்வதற்காக கோயிலின் வழியாக சென்றபோது, அங்கிருந்த கார்த்திக்குமார் என்னுடைய மகனை பார்த்து நீ இப்போது தப்பித்துக்கொண்டாய் எப்போது இருந்தாலும் உன்னை அடிக்காமல்விடமாட்டேன் என்றார். அதைப்பார்த்த என்னுடைய தம்பி பழனிசாமி எதற்கு பிரியதர்ஷ்னை கோயிலுக்கு வரக்கூடாது என்று சொல்கிறாய் என கேட்டும் தேவையில்லாமல் பிரச்சனை எதுவும் செய்யவேண்டாம்எனவும், கூறிவிட்டு அங்கிருந்து திரும்பிவிட்டார். பின்னர் 5 நிமிடத்தில் கார்த்திக்குமாரும், அவருடன் பிரவீன்குமார் மற்றும் கவின் ஆகியோர் என்னுடைய வீட்டிற்குஅருகில் வந்தனர். கார்த்திக்குமார் என்னுடைய மகனின் கன்னத்தில் 2 அரை விட்டதில் என்னுடைய மகன் கீழே விழுந்துவிட்டார். மற்றவர்களும் என் மகனை பிடித்து அடித்தனர்.

3. அதைப்பார்த்த என் தம்பி மனைவி மணியம்மாள் அங்கே ஓடிவந்து ஐய்யய்யோ ஏன் பயனை அடிக்கிறீர்கள் என கேட்டார். அதற்கு கார்த்திக்குமார் என்னடி தேவிடியா நீ இங்கே எதற்கு வந்தாய் என்று கேட்டுக்கொண்டு மூன்றுபேரும் மணியம்மாளை பிடித்துக்கொள்ள கார்த்திக்குமார் ஜாக்கெட்டை கிழித்தார். சேலையை பிடித்து கார்த்திக்குமார், பிரவீன்குமார் மற்றும் கவின் ஆகியோர் இழுத்தனர். அவருக்கு அந்த இடத்தில் நின்றுகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது. கார்த்திக்குமார் அவரை கன்னத்தில் அடிக்க கையை ஓங்கியபோது மணியம்மாள் இடதுகையால் தடுக்க முயற்சிசெய்தார்.

4. அப்போது கையில்இருந்த பிளேடால் கார்த்திக்குமார் இடது கை ஆள்காட்டி விரலில் கிழித்தார். அதில் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. அவருக்கு வலதுகையிலும், நெஞ்சிலும், இடுப்பிலும் காயம் ஏற்பட்டது. அருகே வந்த என்னை பிரவீன்குமாரும், கவினும் பிடித்துக்கொள்ள கார்த்திக்குமார் என் இடது மூன்று விரல்களையும் பிடித்து திருகினார்.

5. பின்னர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டனர். நாங்கள் வீட்டிற்கு வந்துஇருந்தபோது 06.00 மணியிலிருந்து 06.00 மணியளவில் ராஜி என்பவர் வந்து டேய் பழனிசாமி என்று என் தம்பியை அழைத்து அவரை பார்த்து ஏன்டா கேஸ் கொடுக்கவா செல்கிறீர்கள், தாயோழி, தேவிடியா பையா கேஸ் கொடுத்தால் உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டி, கையால் அடிக்கவந்தார். அதைகண்டு பழனிசாமி பயந்து வீட்டிற்குவந்துவிட்டார். பின்னர் என்னடைய தம்பியின் மனைவியை சங்ககிரி அரசுமருத்தவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd /- Thangaraj

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date | : 25.04.2023 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : சங்ககிரி |
| Name | : பழனிசாமி | Calling | : சைசிங் வேலை |
| Father/Husband Name | : அம்மாசை | Religion | : இந்து |
| Village | : நாகிசெட்டிபட்டி | Age | : 55 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.04.2023.

<u>(1முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)</u>

<u>**அரசு தரப்பு முதல் விசாரணை** :</u>

1. நான் நாகிசெட்டிபட்டியில் குடியிருந்து சைசிங் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 31.12.2020ம் தேதி மாலை 05.00 மணியளவில் என்னுடைய அண்ணன் மகன் பிரியதர்ஷன் கோயிலுக்கு செல்வதாக கூறிக்கொண்டு சென்றார். கோயிலுக்கு சென்ற பிரியதர்ஷனை பார்த்த கார்த்திக்குமார் கோயிலுக்கு வந்தால் அடித்துவிடுவேன் என்று கூறியதால் அவர் திரும்பிவந்துவிட்டார்.

2. வீட்டிற்கு வந்ததும் அதைஎன்னிடம் கூறினார். நான் அங்குசெல்லாவிட்டாமல் கிடக்கிறது ஆர்.எஸ். செல்லலாம் என்றுகூறி பிரியதர்ஷனை என்னுடைய இருசக்கர வாகனத்தில் கூட்டிக்கொண்டு மாரியம்மன்கோயில் வழியாக செல்லும்போது கோயிலிருந்த கார்த்திக்குமார் ஆள்காட்டி விரலை காட்டி எப்ப இருந்தாலும் உன்னை அடிக்காமல்விடமாட்டேன் என்றார். நான் கார்த்திக்குமாரை பார்த்து ஏன்டா இவ்வாறு கூறினாய் என்று கேட்டேன். இவ்வாறு பேசுவது தவறு என்று அறிவுரை கூறிவிட்டு வீட்டிற்கு திரும்பிவந்துவிட்டோம்.

3. நாங்கள் வீட்டிற்கு சென்றதும் எங்கள் பின்னால் கார்த்திக்குமார், பிரவீன்குமார் மற்றும் கவின் ஆகியோர் எங்கள் வீட்டிற்குவந்தனர். வந்தவுடன்

கார்த்திக்குமார் பிரயர்ஷனின் கன்னத்திலும், உடலிலும் அடித்தார். மற்ற எதிரிகளும் பிரியதர்ஷனை அடித்தனர். சத்தம்கேட்டதும் மேட் தைத்துகொண்டிருந்த என்னுடைய மனைவி மணியம்மாள் வீட்டிலிருந்து வந்து மூவரையும் பார்த்து எதற்காக அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் என் மனைவியை பார்த்து எதற்கு தேவிடியா இங்க வந்த, எதற்காக கேட்கிறாய் என்று கூறி , மூவரும் கையால் அடித்தனர். கார்த்திக்குமார் ஜாக்கெட்டை பிடித்து இழுத்தார்.

4. இடதுகையில் கீறலும் வீக்கமும் ஏற்பட்டது. வலது கையில் கார்த்திக்குமார் பிளேடால் கிழித்துவிட்டார். பின்னர் அங்குவந்த என் அண்ணன் தங்கராஜியை வலதுகையில் விரலை பிடித்து திருகினர். என்னுடைய மனைவி மணியம்மாளை மருத்துவமனைக்கு கூட்டிச்செல்லலாம் என்று தயார் ஆனபோது அங்குவந்த ராஜி என்பவர் என்னிடம் எதற்கு சண்டை செய்கிறாய் என்று கேட்டார். பின்னர் இதுசம்மந்தமாக கோர்ட் போலிஸ் என்று செல்லக்கூடாது தாயோழி என்றும் மிரட்டிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் 08.30 மணியளவில் சங்ககிரி, அரசுமருத்துவமனையில் என் மனைவியை சிகிச்சைக்காக சேர்த்தோம். இதுசம்மந்தமாகபோலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd /- Palanisamy

Judicial Magistrate No.1,
Sankari.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.72/2022 | Date | : 25.04.2023 |
| Deposition of Witness for | : அ.சா.5 | Taluk | : சங்ககிரி |
| Name | : மாதேஸ்வரி | Calling | : ஆடு மேய்த்தல் |
| Father/Husband Name | : தங்கராஜ் | Religion | : இந்து |
| Village | : நாகிசெட்டிபட்டி | Age | : 50 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.04.2023.
(1முதல் 4 எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் நாகிசெட்டிபட்டியில் குடியிருந்து ஆடு மேய்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் நான்குபேரும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஆங்கில புத்தாண்டுக்கு முந்தைய நாள் என் மகன் மாரியம்மன்கோவிலுக்கு சென்றபோது, கார்த்திக்குமார் என் மகனை பார்த்து நீ இங்கேவந்தாய் அடித்துவிடுவேன் என்று கூறியதாக என் மகன் வீட்டிற்கு வந்து கூறினான். பின்னர் என்னுடைய மகனும், என்னுடைய கணவரின் தம்பி பழனிசாமியும் ஆர்.எஸ். செல்வதற்காக மாரியம்மன் கோவில் வழியாக சென்றபோது, கார்த்திக்குமார் என் மகனை பார்த்து மகனை அடிக்காமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும் அதற்கு பழனிசாமி ஏன் இவ்வாறு கூறுகிறாய் என்று கேட்டதாகவும் கூறினார்கள்.

2. பின்னர் அவர்கள் வீட்டிற்கு வந்ததும், கார்த்திக்குமார், பிரவீன்குமார், மற்றும் கவின் ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து என் மகனை கன்னத்தில் அறைந்ததும் என் மகன் கீழேவிழுந்துவிட்டார். பின்னர் பழனிசாமியின் மகனைவி மணியம்மாள் எதற்காக பையனை பிடித்து அடிக்கீறீர்கள் என்று கேட்டதற்கு என்னடி தேவிடியா நீ எதற்கு இங்கேவந்து கேட்கிறாய் என்று கூறிக்கொண்டு , கையால் அவரை அடித்து ஜாக்கெட்டை பிடித்து கிழித்தனர். பின்னர் மணியம்மாளின்

இடதுகையில் பிளேடால் கீறிவிட்டனர். அங்கே சென்ற என் கணவர் தங்கராஜியை இடதுகையின் விரல்களை திருகி கீழேதள்ளிவிட்டனர். எதிரிகள் எங்கள் வீட்டின் முன்பு வந்து ரோட்டில்வைத்து அடித்தனர். பின்னர் அங்கு வந்த ராஜி என்னடா கேஸ் போகிறீர்கள் என்று கூறினீர்களா என்று கேட்டுக்கொண்டு தேவிடியா பையா என்று கெட்டவார்த்தையால் திட்டி, என்னுடைய கொழுந்தனார் பழனிசாமியை அடிக்கவந்தார். பின்னர் 08.30 மணியளவில் மணியம்மாளை சங்ககிரி , அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd /- Madheswari

Judicial Magistrate No.1,
Sankari.